செய்தி வெளியீடு எண்:579 நாள் : 16.11.2015

<u>**செய்தி வெளியீடு**</u>

16.11.2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவ மழையினால் பாதிக்கப்பட்ட டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதிக்கு உட்பட்ட புது வண்ணாரப் பேட்டையிலுள்ள வீரராகவன் தெரு, தண்டையார் பேட்டையிலுள்ள எல்லைய முதலி தெரு, சீனியம்மன் கோவில் தெரு, எண்ணூர் ஹை ரோடு, கொருக்குப்பேட்டையிலுள்ள ஜெ ஜெ நகர், சுண்ணாம்புக் கால்வாய், திருவள்ளூர் நகர், கொடுங்கையூரிலுள்ள எழில் நகர், பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட முத்தமிழ் நகர், கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட இரட்டை ஏரி ஜங்ஷன் பகுதி மற்றும் மாதவரம், அம்பத்தூர், வில்லிவாக்கம், அண்ணாநகர் மற்றும் ஆயிரம் விளக்கு தொகுதிகளுக்குட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடன் அழைத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து தண்ணீரை உடனடியாக வெளியேற்றவும், தேவையான அனைத்து நிவாரண உதவிகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரிதமாக போர்க்கால அடிப்படையில் வழங்கவும் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆர்.கே. நகர் தொகுதிக்குட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு அங்கு குழுமியிருந்த பொது மக்களிடையே ஆற்றிய உரை பின்வருமாறு:-

வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்—ன் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமை உடன்பிறப்புகளே!

ஆர்.கே.நகர் தொகுதிவாழ் வாக்காளப் பெருமக்களே!

அன்பார்ந்த பொதுமக்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடகிழக்கு பருவமழை தொடங்கப் போகிறது என்பதை முன்பே உணர்ந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என அமைச்சர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறை உயர்அதிகாரிகளுக்கும், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும், இதர அரசு அதிகாரிகளுக்கும் நான் முன்பே உத்தரவிட்டிருந்தேன். அரசு அதிகாரிகளும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சிரத்தையுடன் மேற்கொண்டார்கள். இருந்தாலும், வடகிழக்கு பருவமழைக் காலம் என்பது அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 3 மாதங்களை உள்ளடக்கியது. இந்த வடகிழக்கு பருவமழை காலம் முழுவதும் பெய்ய வேண்டிய மழை, ஒரு சில நாட்களிலேயே கொட்டித் தீர்த்துவிட்டது. இப்படி மூன்று மாத காலத்தில் பெய்ய வேண்டிய மழை, ஒரு சில நாட்களிலேயே கொட்டித் தீர்த்து விட்டால், என்ன தான் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், ஒரு சில இடங்களில் மழை நீர் தேங்குவதையும், அதனால் சேதங்கள் விளைவதையும் தவிர்க்க இயலாது. இப்படி மழை நீர் தேங்கியுள்ளது, பல மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை அறிந்தவுடன், அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டது. அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும், தீயணைப்புத் துறை அதிகாரிகளும், அனைத்து துறை அதிகாரிகளும், மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பணிகளில் தீவிரமாக இரவு பகல் பாராமல் போர்க் கால அடிப்படையில் இங்கு ஈடுபட்டிருக்கிறார்கள். இதோ இந்த பள்ளிக்கூடத்தில் இந்த தொகுதியைச் சார்ந்த, பாதிக்கப்பட்ட 162 குடும்பங்கள் இங்கே தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். இன்று மட்டும் 20,000 உணவுப் பொட்டலங்கள்

வழங்கப்பட்டுள்ளன. தினந்தோறும் தேவைப்படும் மக்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்த தொகுதியில் 7 மருத்துவமுகாம்கள் துவங்கப்பட்டுள்ளன. இங்கே இந்த பள்ளிக்கூடத்திலேயே ஒரு மருத்துவ முகாம் செயல்பட்டு வருகிறது. அதிகாரிகள் இரவு பகல் என்று பாராமல் அமைச்சர்களுடன் இணைந்து மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த தொகுதியில் மட்டும் தேங்கிய மழை நீரை வெளியேற்றுவதற்காக 48 பெரிய மோட்டார் பம்பு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 6 மிகப் பெரிய Super sucker என்னும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உங்களுக்கு விரைவில் சகஜ நிலை திரும்ப என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமோ, அத்தனையும் மேற்கொண்டு வருகிறோம். ஆகவே, இத்தொகுதி மக்கள் கவலைப்பட வேண்டாம். உங்களுக்கு துணையாக நான் இருக்கிறேன், தமிழக அரசு இருக்கிறது என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொண்டு, உங்களுக்கு எந்த சிரமமும் இல்லாமல், விரைவில் சகஜ நிலை திரும்புவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ அத்தனையும் தமிழக அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட முத்தமிழ் நகர் பகுதியில் உரையாற்றும் போது, “இந்தத் தொகுதியில் மட்டும் 22,000 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏழு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன” என்று தெரிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கொளத்தூர் தொகுதியைப் பார்வையிட்டு, அங்கு உரையாற்றும் போது;

மூன்று தொகுதிகளைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்களே!

பொது மக்களே !

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொளத்தூர், அம்பத்தூர், மாதவரம் ஆகிய மூன்று தொதிகளைச் சேர்ந்த மக்கள் இங்கு இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.

வடகிழக்கு பருவமழை தொடங்கப் போகிறது என்பதை முன்பே உணர்ந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அரசு அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல் துறை உயர்அதிகாரிகளுக்கும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கும், அனைத்து துறை அதிகாரிகளுக்கும் நான் ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தேன். அதன் அடிப்படையில் அரசு அதிகாரிகளும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இருப்பினும், வடகிழக்கு பருவமழை என்பது அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய **3** மாதங்களை உள்ளடக்கியது ஆகும். இந்த மூன்று மாதக் காலத்தில் பெய்ய வேண்டிய மழை, ஒரு சில நாட்களிலேயே கொட்டித் தீர்த்துவிட்டது. அதனால், மக்களுக்கு பாதிப்புகளும் மழை நீர் தேங்குவதும், இதனால் சேதங்களும் ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை. இப்படி மழை நீர் தேங்கியுள்ளது சேதங்கள் விளைந்துள்ளது. மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைஅறிந்தவுடன் அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டது. அனைத்துத் துறை அரசு அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும். தீயணைப்புத் துறை அதிகாரிகளும் மீட்புப் பணிகளிலும் நிவாரணப் பணிகளிலும் போர்க் கால அடிப்படையில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக, இந்தப் பகுதியில் வெள்ள நீர் அதிகமாக இருப்பதால் இங்கு மிகப் பெரிய மோட்டார் பம்புகளும், சூப்பர் சக்கர் இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பக்கிங்காம் கால்வாயில் தண்ணீர் வடியும் வரை இங்கு இந்த வெள்ளப் பெருக்கம் இருக்கத் தான் செய்கிறது. ஆனால், மழை நீரை வெளியேற்றுவதற்கு அரசு அதிகாரிகள் போர்க் கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த மழை நீர், கன மழை காரணமாக ஏற்பட்டுள்ள சேதங்களை சிலர் அரசியல் ஆக்கப் பார்க்கிறார்கள். சில எதிர்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தேர்தல் நேரத்தில் எப்படியாவது உங்கள் வாக்குகளை கவர்ந்து விட வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறான தகவல்களை உங்கள் மத்தியில் பரப்பி வருகிறார்கள். ஆனால், இது எல்லாம் மக்கள் மத்தியில் எடுபடாது என்பதை நான் அறிவேன். இந்த மூன்று தொகுதிகளைச் சார்ந்த பொது மக்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு ஆதரவாக, துணையாக நான் இருக்கிறேன். தமிழக அரசும் இருக்கிறது. உங்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை செய்து வருகிறோம். விரைவில் இங்கே சகஜ நிலை திரும்பும். தமிழக அரசே தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க !

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க !

-- என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9**

**நாள்: 16.11.2015**